# பெரோயா பட்டிணத்தாரைப் போல தேவ வசனத்தை ஆராய்தல்
# தேவ வசனத்தை எவ்வாறு படித்து நடைமுறைப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொள்ளுதல்

சிறுவர்களுக்குக் கற்பிப்போர் பாடம் B2b ஐ வாசிக்கவும்.

**ஜெபம்:** “பரலோகத்தில் இருக்கும் எங்கள் தந்தையே, உமது வார்த்தைகளை சரியானபடி விளங்கிக்கொண்டு அதை எங்கள் இருதயத்தில் சேமிக்க தயைசெய்து உதவுவீராக”.

தற்போதைய தேவைக்கும் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாட்டை தெரிந்து கொள்க.

**1. தேவ வார்த்தையைக் கொண்டு உங்கள் இருதயங்களையும் மனங்களையும் ஆயத்தப்படுத்துங்கள்.**

பெரோயா பட்டிணத்தார் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு இருவழிகளில் செயல்பட்டதை **அப். 17:10-12** ல் காண்க.

தேவ சத்தியங்கள் நமது வாழ்க்கையில் உண்டாக்க வேண்டிய பல விஷயங்களை **1 பேது 1:14-22** ல் காண்க.

தேவ வார்த்தை எவ்வளவு காலம் நம்மில் தரித்திருக்கும் என்பதை **1 பேது 1:24-25** ல் காண்க. பவுல், தீமோத்தேயுவுக்கு என்ன எழுதினார் என்பதை **2 தீமோ. 3:10-17** ல் காண்க:

- பவுலின் வாழ்க்கையில் தீமோத்தேயு கண்ட என்னென்ன விஷயங்கள் அவருக்கு அரிய அறிவுரைகளைத் தந்தன?

  *(வசனம் 10-13).*
- இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தால் தனது இரட்சிப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிறுவயது முதல் தீமோத்தேயு அறிந்தது என்ன

  *(வசனம் 14-15).*
- பிறருக்கு உதவி செய்ய வேதாகமத்தை எந்தெந்த வழிகளில் நாம் உபயோகிக்கலாம்


  *(வசனம் 16).*
- தேவன் என்ன நோக்கத்திற்காக நாம் அவரது வார்த்தைகளைப் படித்து நடைமுறைப்படுத்த விரும்புகிறார்?

  *(வசனம் 17)*

**தீமோ. 4:1-5**ல், இளம் மேய்ப்பர்களுக்கான பல பணிகளைக் காண்க (வசனம் 2, 5).

**2. வரும் வாத்தில் செய்ய வேண்டியவற்றை உடன் ஊழியர்களுடன் கலந்து திட்டமிடுக**

- விசுவாசிகளை சந்தித்து வேதாகமத்தை அவர்களே படிக்குமாறு உதவுங்கள். உதாரணமாக:
- சபையின் சிறு குழுக்களும் குடும்பங்களும் ஒன்றாக அமர்ந்து வேதத்தைப் படிக்க உதவவும்.
- ஒருவரை ஒருவர் தாங்கள் கற்றுக் கொண்டது என்ன என்று கேட்டு ஊக்கப்படுத்தலாம்.
- ஒவ்வொரு வாரமும் பல வசனங்களை மனப்பாடம் செய்ய விசுவாசிகளுக்கு உதவுங்கள்.



**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக:**

பரிசுத்த ஆவியின் வல்லமையால் தமது வார்த்தைகளின் மூலமாகப் பேசுமாறும், நாம் கேட்டதை நடைமுறைப்படுத்த உதவவும் தேவனிடம் **ஜெபிப்போம்.**

**அப்.17:10-12 ஐ வாசிக்கவும்**

- பெரோயா பட்டிணத்தார் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட விதம் பற்றி யாவரும் கேட்கவும் அறிந்து கொள்ளவும் முதலில் வேண்டிக் கொள்ளுங்கள்.
- நாமும் பெரோயா பட்டிணத்தாரைப் போல தேவ வார்த்தையை ஆராய வேண்டும் என்பதை விளக்குங்கள்.

சும்மா கேட்டுக்கொண்டிருப்பதை விட்டு அதன் தங்கத்தைத் தோண்டி எடுக்க வேண்டும். நமது முன்முயற்சியால் தேவ வார்த்தையை ஆராயத் தொடங்க வேண்டும். நமக்கு உதவும் சில வழிமுறைகள்.

வேதாகமம் நம்மோடு பேசுமாறு அனுமதிப்பது எவ்வாறு என்பதை விளக்கவும். வழிகாட்டலுக்காக ஜெபித்தபின், நான்கு விஷயங்களைச் செய்ய வேண்டும்.

**1.** ஒரு தேவ வசனத்தை விளக்கமாக ஆராய வேண்டும். ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் அலசிப் பார்க்கவும்.

**2.** அர்த்தம் தெளிவாக இல்லை என்றால், சூழலையும் அந்தப் பகுதியின் அமைப்பையும் ஆராய்க:

- யாருக்காக எழுதப்பட்டது?
- யார் எழுதியது? ஏன்?
- இதன் அர்த்தத்தை தெளிவிக்கும் வண்ணம் முன்னும் பின்னும் உள்ள வசனமும், அதிகாரங்களும் என்ன கூறுகின்றன?
- சரித்திர சூழல் என்ன?
- எப்போது எழுதப்பட்டது?

**முக்கியமானது**: (அது கிறிஸ்துவுக்கு முன் உள்ள பழைய உடன்படுக்கைக்கு எழுதப்பட்டது என்றால் அது பழைய இஸ்ரவேலுக்கு உரியது: புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ள உங்கள் சபைக்கு பொருந்தாது) இந்த வசனத்தின் மூலம் தேவன் நம்மை என்ன செய்யச் சொல்லுகிறார்?

3. முதன்மையான சத்தியத்தையும் அதன் நடைமுறை பயனையும் இவற்றில் இருந்து பிழிந்தெடுக்கவும்.

4. நீங்கள் அறிந்து கொண்டதை நடைமுறைப்படுத்துக. வேதாகமத்தை தந்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

தேவ வார்த்தையைப் படிப்பதின் மூலம் அடைந்த ஆசீர்வாதத்தை சாட்சிகளாகவும் அறிக்கைகளாகவும் கூறும் படி விசுவாசிகளைக் கேளுங்கள்.

### வேதாகமத்துக்கு அர்த்தம் கூறுவதுபற்றிய சிறுநாடகம்

**திருவாளர் பாரம்பரியம்:** திருவாளர் புதிய விசுவாசி. கொஞ்ச நேரம் வேதாகமத்தைப் படிப்பதைப் பார்க்கிறார். பின் அவரிடம் இருந்து அதைப் பிடுங்குகிறார், "வேதாகமத்தை உங்களால் சுயமாகப் புரிந்து கொள்ள முடியாது. இதோ நீங்கள் வாசிக்க அதற்குப் பதிலான சில நவீன புத்தகங்கள்."

**திருவாளர் புதிய விசுவாசி:** சட்டைக்கு அடியில் இருந்து இன்னொரு வேதாகமத்தை எடுத்து, "இல்லை உங்கள் புத்தகங்களை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். படித்து, மனனம் செய்து, கீழ்ப்படிந்து நான் வேத வார்த்தையை என் இருதயத்துக்குள் மறைத்து வைத்துக் கொண்டேன். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை உபயோகித்து எனக்கு புதிய வாழ்க்கையைத் தருகிறார். வேறு எந்தப் புத்தகத்தாலும் இதைச் செய்ய முடியாது."

**திருவாளர் பாரம்பரியம்:** "பழைய ஏடுகளை விளக்கப் புதிய முறைகளைக் கற்றுக்கொண்ட போதகர்களாலேயே அதை புரிந்து கொள்ள முடியும்."

**திருவாளர் புதிய விசுவாசி:** ஜெபித்து, விளக்கம் காணும் எளிய முறைகளை பின்பற்றினால் எந்த விசுவாசியும் தேவ வார்த்தையை புரிந்து கொள்ள முடியும் என்று எங்கள் குழுவின் மேய்ப்பர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த கவிதை நாடகம் ஆகியவற்றை சபைமுன் வைக்கட்டும். தங்கள் நாடகத்தை பற்றி கேள்விகளும் கேட்கலாம்.

குடும்பங்களும் சிறுகுழுக்களுக்கும் வேதாகமத்தைப் படிக்க, அந்த வாரத்துக்கென திட்டமிடப்பட்டுள்ள செயல்பாடுகளை அறிவிக்கவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களை** அமைத்து அவர்களுக்கு உதவி செய்யவும்.ஜெபித்து, திட்டங்களை உறுதிசெய்து, ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும்.

**கர்த்தரின் பந்தியை ஆரம்பிக்க** யாத் 12, வசனங்கள் 3, 7-8, 12 ஐ வாசிக்கவும். முதல் பஸ்காவைப் பற்றி சுருக்கமாக விவரிக்கவும். இதற்கு இயேசு புதிய அர்த்தத்தைக் கொடுத்து மிகவும் புனிதமான நிகழ்ச்சியாக அமைத்தார். நமது பாவங்களுக்கு மரித்த தேவ ஆட்டுக்குட்டியே இயேசு. 2 தீமோ. 3:16-17ஐ யாவரும் சேர்ந்து **மனப்பாடம்** செய்க.

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied. Download from
www.Paul-Timothy.net